செய்தி வெளியீடு எண்:67 நாள்:30.01.2021

# செய்தி வெளியீடு

## பிப்ரவரி 2–ஆம் நாள்
## சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சி தொடங்கப்படும்!

சென்னை, பட்டினப்பாக்கத்தில் உள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாகத் தமிழ்நாடு அரசு பல்வேறு மொழி வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. நடப்பு நிதியாண்டு முதல் அகரமுதலித் திட்டத்தின் சார்பில் 80 பேருக்கு ஆறு வகையான விருதுகள் வழங்க அரசாணைகள் பெறப்பட்டுள்ளன. இவ்வியக்ககத்தின் சார்பில் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் வீரமாமுனிவர் விருதையும், தேவநேயப் பாவாணர் விருதையும் முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி 1–ஆம் நாள் வழங்குகிறார். மற்ற விருதுகள் பிப்ரவரி கடைசி வாரத்தில் நடைபெறும் தமிழ் அகராதியியல் நாள் விழாவில் அமைச்சர்கள் முன்னிலையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர தூய தமிழைப் பரப்பும் வகையில் கல்லூரிகள்தோறும் மொழி விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு முதல் ஒரு கல்லூரிக்கு 10 மாணவர்கள் வீதம் தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மொழி வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அரசாணையின் வழியாக அறிவித்துள்ளது.

அதனைச் செயற்படுத்த முதல் கட்டமாக சென்னையிலுள்ள 20 கல்லூரிகளிலிருந்து 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பிப்ரவரி 2–ஆம் நாளிலிருந்து பிப்ரவரி 5–ஆம் நாள் வரை பயிற்சி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. **‘மொழியியல், சொற்பிறப்பு, கலைச்சொல்லாக்கம்’** என்ற கருப்பொருளில் முனைவர் மா. பூங்குன்றன் மற்றும் முனைவர் இந்திரா பிரியதர்ஷினி ஆகியோரும், **‘கணினித்தமிழ் வளர்ச்சியில் சிக்கல்களும், தீர்வுகளும்’** என்ற தலைப்பில் திரு. அ. மதிவாணன் அவர்களும், **‘தூய தமிழும் இலக்கணமும்’** என்ற தலைப்பில் புலவர் வெற்றியழகனாரும், **‘தமிழ் வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு’** என்ற தலைப்பில் திருமதி த. இளவேனில் முல்லை ஆகியோரும் பயிற்சி வகுப்பு நடத்த இருக்கிறார்கள். பிப்ரவரி 2–ஆம் நாள் காலை 10.00 மணியளவில் தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநரும் கல்லூரிக் கல்வி முழுக் கூடுதல் இயக்குநருமான முனைவர் கே. விவேகானந்தன் இ.ஆ.ப., அவர்கள் விழாவினைத் தொடங்கி வைக்கிறார். பயிற்சியின் நிறைவு நாளான பிப்ரவரி 5–ஆம் நாள் மாலை 4.00 மணிக்குத் தமிழ்வளர்ச்சி, தமிழர் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன் அவர்கள் பயிற்சி மாணவர்களுக்கு நியமனச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரை நிகழ்த்த இருக்கிறார்கள்.

பயிற்சி மாணவர்களுக்குச் சொல்லாக்க நெறிமுறைகள், துறை சார்ந்த கலைச்சொற்கள், இயக்ககத் திட்டங்களும் செயற்பாடுகளும் அடங்கிய கையேடு வழங்கப்படும் எனச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**